755

கழக

இளைஞர் பாட்டு

16 MAY 1947

கழக வெளியீடு—உஅஅ

கழக

இளைஞர் பாட்டு

(5, 6 ஆம் வகுப்புக்கள்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 MAY 1941
MADRAS

784.095411
1703

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை.

பதிப்புரிமை] 1941 [விலை அணா 6

NR44

முன்னுரை

சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குரிய வழிகள் பல; அவற்றுள் பாட்டுக்களின் வாயிலாகப் பலவுங் கற்பித்தல் ஒரு சிறந்த வழியாகும்.

சிறுவர் விரும்புவனவும் பாட்டுக்களே. சிறுவர் உள்ளத்தில் என்றும் நீங்காது நிலைப்பனவும் பாட்டுக்களே. எனவே, 'குழந்தைப் பாட்டுக்கள்' என்ற தலைப்பில் துவக்கப்பள்ளி 1, 2-ஆம் வகுப்புக்களுக்குப் பயன்படுமாறு முன்னர் வெளியிட்டோம். இப்போது 'சிறுவர் பாட்டு' என்ற தலைப்பில் சில பாட்டுக்களை 3, 4-ஆம் வகுப்புக்களுக்குப் பயனுமாறு தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

அதற்கு அடுத்த புத்தகமாகத் துவக்கப்பள்ளி 5, 6-ஆம் வகுப்புக்களுக்குப் பயன்படுமாறு 'இளைஞர் பாட்டு' என்ற தலைப்பில் தமிழறிஞர் சிலர் பாடிய பாட்டுக்களைத் தொகுத்து வெளியிடுகின்றோம். அவை இயற்கை, கணக்கு, நாடகம், வரலாறு, உரையாடல், கதை, கடவுள் வாழ்த்து முதலிய பல கருத்துக்களின் மேலும் இயற்றப்பெற்றிருக்கின்றன. தமிழாசிரியர்களும் பள்ளிக்கூடத் தலைவர்களும் இதனையும் வாங்கி மாணவர்கட்கு இன்பம் ஊட்டுவார்களாக!

இதன்கண் சேர்த்துக்கொள்ளுமாறு தாங்கள் பாடிய பாட்டுக்களை அன்புடன் அனுப்பியுதவிய தமிழ் அறிஞர்கட்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

16 MAY 1941
MADRAS
1705

பக்கம்

வித்துவான் பே. கோவிந்தனவர்கள்

பச்சைப் பசுங்கிளி	20	நாடகம்	55
செயத் தகுவன	33	தமிழ் நாடு	42

தமிழ்க் கவி சி. து. கன்னிசாமி அவர்கள்

வெண்ணிலா	5	தமிழர் நாகரிகம்	45
தென்றல்	6	பொங்கல் விழா	47
சந்திரன்	10	உண்ணுமுறை	50
சூரியன்	11	ஊசல் ஆட்டம்	51
கடலின் பெயர்கள்	13	கும்மி யடித்தல்	52
நிலப் பாகுபாடு	14	பந்தாட்டம்	53
இந்தியா	14	கோலாட்டம்	53
மலை	16	பாரி வள்ளல்	64
வாழை மரம்	18	பேகன்	66
கிளி	21	பேராசை பெருமோசம்	68
காக்கை	24	சோம்பேறிப் பையன்	69
பயிர் வேலை	28	ஓநாயும் ஆட்டுக்குட்டியும்	71
அறிஞர்களும் பொறிகளும்	29	விவேகாநந்தர்	73
கல்வியின் சிறப்பு	33		

தமிழ்க் கவி ல. கு. கிருஷ்ணனவர்கள்

பசுங்கொடி	16	நாய்	25
வெள்ளைப் புறாக்கள்	22		

இராவ்பகதூர் C. M. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள்

ஆறு 7

தமிழ்ப் புலவர் அ. நடராஜ பிள்ளை அவர்கள்

தமிழ்த்தாய்த் திருப்பள்ளு 43

பக்கம்

கரந்தை திரு. R. புருடோத்தமனவர்கள்

நன்னெறி 34

கழகத் தமிழ்ப் புலவர் இளவழகனரவர்கள்

இலக்கணம் 40 கடவுள் வாழ்த்து ('உலகத்தின்') 75

வ. சுப்பையா அவர்கள்

அச்சமில்லை அச்சமில்லை 36

தமிழ்ப் புலவர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்

தமிழ்மொழி வாழ்த்து 43

ப. மாணிக்கம் அவர்கள். பி. ஏ.

பொங்கல் வாழ்த்து 49

வித்துவான் ம. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள்

வானவூர்தி 30

சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள்

கற்கை நன்றே 37

பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்

செந்தமிழ் நாடு 41

அறிஞர் பலர் பாடியவை

நான் அறிந்த பூதங்கள் 7

விண் மீன் 9

பறவையும் உலகமும் 27

அன்னையின் அன்பு 31

கட்டை இடுப்பில் துட்டுண்டோ 56

எறும்பும் புறவும் 57

இரக்கமுள்ள இளைஞன் 60

ஆலமரமும் நாணலும் 62

கடவுள் வாழ்த்து

பூதத்தாழ்வார் ('யானே தவஞ்') 75

மாணிக்கவாசகர் ('வழங்குகின்') 76

இராமலிங்கர் ('அறிவிலேன்') 76

கழக இளைஞர் பாட்டு

வெண்ணிலா

நீலக் கடலினிலே
நின்றெழு வெண்ணிலவே
கோலக் கடலினுள்ளே—நீநாடிய
கொள்கைகள் என்னஉண்டோ!



வானக் கடலினிலே
வயங்கும்நல் வெண்ணிலவே
வானக்கடலினுள்ளே—நீகொண்டதோர்
மீனின்பே ரென்னசொல்லாய்

முல்லை மலர்ந்ததுகாண்
மொய்ம்மலர் ஆம்பலென்னும்

நல்ல மலர்களுமே—நின்வரவினல்
நாடி மலர்ந்தனகாண்
கொண்ட களங்கமதைக்
குணமென நீக்கிலையே
பண்டை யெழில்மதி நீ—இல்லாவிடில்
பாரிருள் போகுமோசொல்

தேய்ந்து வளருமெழில்
சேருநல் வெண்ணிலவே
ஆய்ந்து நிலையாமை—தன்னை
அறிய உணர்த்தினையே. 1

தென்றல்

சிலுசிலுத்த பூங்காற்று
தென்றல்என னுங் காற்று
மலயமலை இருந்துவரும்
மாண்புமிகு காற்று.

சந்தனத்தின் வாசமதைச்
சார்ந்துவருங் காற்று
மந்தமிகும் துன்பமதை
மாற்றுமொரு காற்று.

பாண்டியர்கள் செல்வமெனப்
பகர்ந்தஇளங் காற்று
ஈண்டுகோடைத் துன்பமதை
இன்பமாக்கும் காற்று.

கும்பமுனி வளர்த்துவிட்ட
கொம்பெனும்பூங் காற்று
எம்பெருமான் ஆசைகொள்ளும்
ஏற்றம்மிகும் காற்று. 2

ஆறு

மலையில் பிறந்தாய் வண்டல் உறுவாய்
விலையில் பொருளை விரைந்தே கொணர்வாய்
அலையில் நுரையில் அணுகிப் பாய்வாய்
தொலையில் சமனில் தோன்றிச் செல்வாய்.

புன்செய் நிலத்தோர் புதுமை பெறவே
நன்செய் நிலமாய் நனிதான் செய்வாய்
இன்செய் பண்பும் இனிதே கொளலால்
பொன்செய் வண்மை பொருந்தி நிற்பாய்.

இயற்கை அழகோ இருபால் கொள்வாய்
செயற்கை அழகும் செறிந்தே நிற்பாய்
முயற்சி எடுத்து முதற்கண் மக்கள்
வயற்கண் ஆக்கும் வன்மை உனதே. 3

நான் அறிந்த பூதங்கள்

நான்அறிந்த பூதம்ஐந்து
நவிலுகின்றேன் கேளுங்கள்
நான்அறிந்த பூதங்களே
நாளும்உண்மை ஆவன.

மண்எல்லாம் பூதம்ஒன்று
மாண்புடைய இப்பொருளே
திண்ணியதாய் நமைத்தாங்கும்
திருஎல்லாம் இதன்விளைவே.

நீர்எல்லாம் ஒருபூதம்
நிலமதனைச் சூழ்கடலாய்ச்
சீருடைய தண்மைஎல்லாம்
சிறப்பாகத் தந்திடுமே.

தீஎல்லாம் ஒருபூதம்
திகழும்ஒளி உருவாகும்
பேயாகி அழித்தாலும்
பெருமைபெற உணவளிக்கும்.

காற்றெல்லாம் ஒருபூதம்
காணத்தான் இயலாதே
ஆற்றல்மிக உடையதாகும்
ஆருயிரின் வாழ்வாகும்.

வெளியாகும் ஒருபூதம்
மிகப்பரந்து ஒலிஇயக்கும்
வெளியாகும் இதன்பெருமை
மிகப்பெரிய நூல்களிலே.

பூதங்கள் இவைஐந்தும்
பூஉடலாம் உயிர்களுக்கே
பூதங்கள் இவைஐந்தும்
புகழ்கோயில் ஈசனுக்கே.

விண் மீன்

நீல வானிலே நிலவு மீன்களே
கோலம் போலவே கூடி மிளிருவீர்

பாலைப் போலொளிர் பனிநி லாவுடன்
மாலைப் போதினில் மகிழ்ந்து உலவுவீர்

நாளும் நாளுமே நாலு திசையிலும்
நீளத் தோன்றிவிண் நிறைந்து மறைகுவீர்

வாவி நீரிலே வளரு மலரெனத்
தாவி வானிலே தவழ்ந்து ஒளிருவீர்



வரிசை வரிசையாய் வண்ணம் வண்ணமாய்
குரிசில் நிலவுடன் கூடி ஆடுவீர்

கண்ணைக் கவருவீர், கருத்தைக் கவருவீர்
விண்ணை விளக்குவீர், மண்ணை விளக்குவீர்

நின்று நோக்குவோர் நினைவை உயர்த்துவீர்
துன்றி நவமணிச் சோதி காட்டுவீர்

காட்டில் தோன்றுவீர், கடலில் தோன்றுவீர்
வீட்டில் மக்களும் விழையத் தோன்றுவீர்

கோவில் சுற்றுவீர், குளங்க ளாடுவீர்
நாவில் மந்திரம் நவில்வ தில்லையோ ! 5

சந்திரன்

சூரியனைச் சுற்றும் பூமி—அதைச்
சுற்றியே ஓடும் நிலாவெனுங் கோளம்
ஊரும்இத் திங்கள் தனக்குச்—சொந்த
ஒளியொன்று மில்லை யென்றே உணர்வாயே



சூரிய கிரகணம்

சூரியன்பால் ஒளி வாங்கித்—தன்னால்
சுற்றப்படும் இந்தப் பூமியில் வீசும்

ஒருதரம் பூமியைச் சுற்றில்—நாட்கள்
இருபத்தே ழல்லது இருபத்தெட் டாமே

மதியினுல் ஆமிந்த நாட்கள்—சேர்த்து
மாதமென் றேயுலகெங்கும் அழைக்கும்

மாதத்திற் பாதிநா ளெல்லாம்—இந்த
மதியும் சூரியன்பக்க மாய்வரும் போது

நிலவின் ஒளிஅந்த நாட்கள்—தம்மில்
நின்றுநா டோறும் வளர்ச்சியாய்த் தோன்ற



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 MAY 1941
MADRAS

சந்திர கிரகணம்

வளர்பிறை யென்றழைப் பார்கள்—மாதத்தில்
மற்றநாள் முறையே தேய்பிறை யாகும்

சூரிய னுக்கும்பூ மிக்கும்—இடையே
சூரிய கிரணமாம் மதிவரின் நேராய்

சந்திர சூரியர்க் கிடையில்—பூமி
சந்தித்தால் சந்திர கிரணமா மென்பார்

இந்தவகை எழில் திங்கள்—உலகம்
இன்புற ஒளிதந்து இலகுறும் அன்றே. 6

சூரியன்

சூரியன் என்னும் பெரிய உருண்டை
தூய நெருப்புப் பிழம்பதன் அண்டைத்

தோன்றும் பலசிறு கோளங்க ளெல்லாம்
சுற்றும்; இப் பூமி அவைகளில் ஒன்றும்
பூமியைப் போலப் பதின்மூன் றிலட்சம்
பொருந்தும் மடங்கந்தச் சூரியன் தோற்றம்
சூரியன் வன்மையால் பூமி யுருண்டை
சுழலும்; தன்னைத்தானே ஒருதரம் சுற்றில்



சூரியன்

சூரியன் தூய ஒளிபடும் பக்கம்
தோன்றும் பகலாகும் ஒளியில்லாப் பக்கம்
இரவாகும் என்பர்இவ் வகையேஇப் பூமி
இரவியை ஒருதரம் சுற்றித் திரும்ப
நாட்கள்முன் னூற்றறு பத்தைந்தா மென்பார்
நாளிவை சேர்ந்த கணக்கோ ரியாண்டு
இப்படி யேபுடை கோளங்கள் சுற்ற
இயங்காது நிற்கும் இரவி சிறந்தே. 7

கடலின் பெயர்கள்

மழைக்கு முதற்கா ரணமாகி
வாழும் கடலின் வகையுரைப்போம்

விலையில் உயர்ந்த முத்துகளும்
வேண்டும் பவழத் திரள்களுமே

உலகந் தன்னில் உயிராக
உயரும் உப்பும் நெறியாகக்

கடலின் நீரில் பிறந்ததுவே
காணு மிடத்தில் சிறந்ததுவே

உவர்நீர் நிறைந்த பரப்பதனுல்
'உவரி' என்பார் சிறப்பதனுல்

அளவு காணுப் பெருமையினுல்
'அளக்கர்' ஆகும் உரிமையினுல்

உலகம் முழுதும் உண்டாக்கி
உண்டாம் உலகம் தனைக்காத்து

ஆகும் இறுதிக் காலத்தே
அழித்து மூன்று தொழில்செயவே

'முந்நீர்' என்ற பெயர்கொள்ளும் ;
மொய்க்கும் செல்வம் உடைமையினுல்

'வாரி' ஆகும் ; ஆழத்தால்
வகுத்தார் ஆழி யெனும்பெயரை

கடப்பார் எவரும் இல்லாமை
கண்டே அழைத்தார் 'கடல்' என்றே
ஆறு பலவும் அடைந்தேவாழ்
அழகாம் வீடும் இதுவேயாம். 8

நிலப் பாகுபாடு

மலையும் மலையைச் சார்நாடும்
வலிய குறிஞ்சி நிலமாகும் ;
அமைந்த காடுங் கொல்லைகளும்
அழகாம் முல்லை நிலமென்ப ;
நீரும் நீரால் விளைவயல்சேர்
நிலமும் மருத நிலமாகும் ;
கடலுங் கடல்சேர் நிலமெல்லாம்
கால்செய் நெய்தல் நிலமென்ப ;
பகுத்த இவற்றி னுட்சேராப்
பாரே பாலை நிலமாமே. 9

இந்தியா

இந்தப்பெரிய நிலவுலகம்
ஐந்துபெரிய பிரிவாம்—அவை
அந்தமில்சீர் ஆசியாவும்
ஐரோப்பாஆப் பிரிக்கா.

ஆஸ்திரேலி யாஅமெரிக்கா
ஆகுமென்பர் மேலோர்—இந்த
ஏத்தும்ஐந்து கண்டங்களினுள்
ஆசியாமிகப் பெரிது.

ஆசியாவின் தென்முகத்தில்
அமைந்த திந்தியதேசம்—இந்தத்
தேசத்தின்வட எல்லையாகச்
சிறந்தஹிமய மலையே.

கங்கைசிந்து பிரமபுத்திரா
கருதுநதிகள் மூன்றும்—கலந்
தெங்கும்வளமும் எழிலும்சேர
எல்லாநலமுந் தோன்றும்.

ஆரியாஙல் வர்த்தமென்றே
அழைப்பாரந்தப் பகுதி—சாத்
பூரம்விந்திய மலைகள்தெற்கிற்
பொருந்துசுவராம் தகுதி.

இம்மலைகளின் தென்றிசையில்
இருக்குந்தக்கிண நாடு—நில
வெம்மைதீர்கோ தாவரிகா
வேரிபற்பல ஓடும்.

நதிகள்பலவுஞ் செம்மைசெய்ய
நலங்கள்பலவும் மேவி—நாம்
வதியும்இந்தத் தென்னிந்தியா
வயங்கும்உலகில் தாவி. 10

மலை

கண் ணுக் கெட்டா துயர்ந்த மலையே
கருநி றத்தினைக் கொண்ட மலையே
விண்ணை யொட்டி விளங்கு மலையே
விஞ்சை நாடு விளங்கு மலையே.

சான்றோர் செய்யுளைப் போற்பல பொருள்கள்
சாரச் சாரப் பெருகு மலையே
கா னும் யாறுங் கலந்து விளங்கும்
காட்சிக் கின்பங் கொடுக்கு மலையே.

எல்லா முங்கடந் தேநிறை பொற்பின்
இறைவன் போலென் றும்அழி வில்லாய்
எல்லா முந்துறந் தார்மனம் போல
என்று மேசலி யாத மலையே.

நோய்கள் போக்கும் மருந்துகள் நின்பால்
நோற்போர் தமக்கும் புகலிடம் நின்பால்
பாயும் ஆறுக ளால்பயன் ஈவாய்
பகரு மாமலை வாழிநீ வாழி. 11

பசுங் கொடி

("பாப்பா பாட்டு"—மெட்டு)

ஓடிவிளை யாடுகின்ற சின்னபாப்பா !—நான்
உன்றனுக்குக் காட்டுவதை உற்றுப்பார்ப்பாய்

தேடினும் அகப்படுமோ சிலபொழுதில்—கையால்
செய்துபார்க்க வும்முடி யாதேஎளிதில் (ஓடி விளை)

பச்சைநிற மாகப்பல இலைசூடி—நீண்ட
பாம்புஇவை யென்னச்சில கொடியோடி

இச்சையுடன் கொம்புகிளை தமைத்தேடி—தன்
எண்ணம்போல் வளைந்தவைமேல் சுற்றி ஆடி (ஓடி விளை)

முத்துபல ரத்தினம்போல் மொக்குகள்கொண்டு—வண்டு
மொய்த்துஉண் ணும் தேன்நிறைந்த பூக்கள்மலர்ந்து
சுற்றுமுள்ள பேர்களிக்க மலர்காட்டி—நல்லோர்
துட்டரிவர் என்றெண்ணாமல் மணம்வீசி (ஓடி விளை) 12

வாழை மரம்

வாழை மரத்தைப் பயிர்செய்யும்
வகையைச் சொல்வேன் கேட்டுய்யும்

நிலத்தை அகழ்ந்து மண்ணெடுத்து
நிரம்ப நிரம்ப எருமடுத்து



வாழைமரம்

வாழைக் கன்றை அதில்நட்டு
வகையாய்த் தண்ணீர் தினம்விட்டு
இரண்டு வாரம் செலுமட்டும்
இடிக்க வேண்டும் செடிசுற்றும்

தண்ணீர் மட்டும் தினந்தோறும்
தவரு தூற்ற வேருன்றும்
பின்னர்க் கொத்திக் களைபறித்துப்
பிசகில் லாமல் எருவிட்டால்

மரத்தின் கீழே சிலகன்று
வகையாய் முளைக்கும் எழில்நன்று
வயது முதிர்ச்சி பெற்றதன்பின்
வாழை ஓரிலை உற்றீனும்

கண்ணடி யிலையென் றேஅதனைக்
கருதி அழைப்பார் பின்பதனை
அடுத்து ஒற்றைப் பூவெடுக்கும்
அதன்பின் வாழைக் குலையடுக்கும்

காயும் ஆகும் சமைத்துண்ணக்
கனியும் ஆகும் சுவைத்துண்ணப்
பூவும் தண்டும் கறிவகையாம்
பூமியில் இதுபோல் மரமிலையாம்

இலையே உண் ணுங் கலனுகும்
இதன்மேற் பட்டையுங் கலனுகும்
பூவைத் தொடுக்க நாருதவும்
பொய்யா தென்றும் பாருதவும்.

பச்சைக் கிளி

பச்சைப் பசுங்கிளியே வாவா
பாலுந்தே னுந்தருவேன் வாவா
மெச்சும் பசுங்கிளியே வாவா
மெல்லமெல் லப்பறந்து வாவா
கண்ணைக் கவரும்உன்றன் பச்சை
காதுக் கினிக்கும்உன்றன் கொச்சை
விண்ணில் பறக்கும்உன்றன் விச்சை
வியப்பினைச் செய்கிறது வாவா
பார்க்கப் பகட்டும்உன்றன் மூக்கு
பண்ணோடு பாடும்உன்றன் நாக்கு
வேர்த்துவேர்த் தலைவதை நீக்கு
வீட்டில் விளையாடுவோம் வாவா
காட்டில்என் பறக்கின்றாய் கிள்ளாய்
கனிகள் பலதருவேன் கொள்ளாய்
வீட்டில்என் னோடுநுழை உள்ளாய்
விரும்பி விளையாடுவோம் வாவா
பைந்தமிழ்ப் பாட்டளிப்பேன் முன்னால்
பாடுமுன் பாட்டையளி பின்னால்
எந்த விதத்தினிலும் என்னால்
இன்னல் வராதுனக்கு வாவா. 14

கிளி

ஆற்றங் கரையினிலே—எழில்
ஆல மரக்கிளையில்
வீற்றிருக் குங்கிளியே—உன்றன்
மேன்மையை என்னசொல்வேன்
பச்சை நிறக்கிளிஉன்—அலகு
பவழத்தா லாகியதோ



நச்சி உனைவளர்ப்பார்—உன்றன்
நன்மையைக் கண்டனரோ
சின்னஞ் சிறுகுழந்தை—குழல்
சேர்ந்தஇன் னோசையினுல்

என்ன பொருளுமின்றி—உரை
இன்ப மழலையைப்போல்
சொன்னதையே திருப்பிச்—சொல்லுந்
தோலா வழக்குடையாய்
நின்னெழில் என்னசொல்வேன்-கிளியே
நீள நினைவதல்லால். 15

வெள்ளைப் புறாக்கள்

நெல்லறுத்த வயல்களிலே
நேர்ந்தமாலை வெய்யிலிலே
கள்ளமற்று விதைபொறுக்கும்
வெள்ளைப் புறாக்காள்—உங்கள்
காட்சிகாணக் கிட்டிவந்தேன்
குள்ளத் தாராக்காள்!

மரகதம்போல் கண்ணழகும்—
மணிபிளக்கும் வாயழகும்
திறனமைந்த பவழக்காலும்
வெள்ளைப் புறாக்காள்—உமக்குச்

செய்தனுப்பும் வலவன்எவன்?
குள்ளத் தாராக்காள்!



பார்த்தகண்கள் யானிமையேன்—
பசித்திட்டாலும் வீடடையேன்
நேர்த்திகண்டு நான்மகிழ்வேன்
வெள்ளைப் புருக்காள்—என்
நெஞ்சைப் பறிகொடுத்தேன்
குள்ளத் தாராக்காள்!

என்றும் குளித்திடுவீர்—
இணைபிரியீர்! நாங்களதைக்
கண்டு நடந்திடவே
வெள்ளைப் புருக்காள்—வழி
காட்டவந்த தெய்வம்நீரோ
குள்ளத் தாராக்காள்! 16

காக்கை

சின்னஞ் சிறிய பாலர்களே
சிந்தனை செய்வீர் சீலர்களே
எந்த உயிரும் எப்பொருளும்
எடுத்துக் காட்டும் நற்பொருளும்
கரிய காக்கையைக் காணுங்கள்
கண்டதன் வழியைப் பேணுங்கள்
விடியற் காலை எழுந்திருக்கும்
விரைவாய்ப் பறந்து தொழில்பார்க்கும்
உறவைச் சேர்ந்தே உணவருந்தும்
ஒன்ருய்க் குலவி மனந்திருந்தும்
இனத்தில் ஒன்று தீங்குற்ருல்
எல்லாம் கரையும் பாங்குற்றே

அழுகிய பொருள்களைத் தாமருந்தி
அகிலந் தூய்மை ஆக்குமிது
உலகம் நோயால் நசியாமல்
உய்வது காக்கை செயலாமால்



தினமும் மாலை நீர்நிலையைத்
தேடி முழுதும் சீர்நிலவ
இன்னும் இவைபோல் எவ்வளவோ
இருக்கும் குணங்கள் சொல்லளவோ. 17

நாய்

(இங்கிலீஷ் நோட்டு)

வாலையாட்டிப் பல்லைக் கெஞ்சும்
வண்ண நாயே கிட்டி வா !
வார்த்தைசில சொல்ல வந்தேன்
வந்து கேட்டு எட்டப் போ !

உன்னைப்போல உதவி செய்வார்
ஒருவ ரில்லை யாயினும்
உன்னிடத்தில் பாயும் பேதைக்
குணம மைந்த தென்கொலோ !



ஆட்டுமந்தை வீட்டுக் காவல்
அனைத்தும் உன்ன தாயினும்
அயலார்நல்லர் தீய ரென்று
அறியா தென்ன குக்கலே.

கலக்க மின்றி வழியில் செல்லக்
கல்லா மல்நீ வளைகிருய்
கட்டிப்போட்டுக் கஞ்சி வார்ப்போர்
கண்டாய் வாலைக் குழைக்கிருய்.

தீயர்நல்லர் என்று நன்ருய்த்
தெரிந்து கடிக்கப் போரிடு

செய்வதென்றும் ஆய்ந்து ணர்ந்து
சீராய் நல்ல பேரெடு. 18

பறவையும் உலகமும்

கேளுங்கள் பாலர்களே !—நானும்
கிடந்த பொழுதுஒரு முட்டையினுள்ளே
வட்ட வடிவமான—சிற்றுருண்டை
வழுவழுப்பான வெள்ளை ஓடுஎன்றே
உலகத்தை மதித்திருந்தேன்—பிறகுநான்
உன்னத முள்ளசிறு கூட்டிலிருந்தேன்



அப்போது இந்தஉலகம்—புல்லாலே
ஆகிஒரு தாயுடனே அமைந்ததென்றே
உள்ளத்தில் மகிழ்ச்சிகொண்டேன்—மெல்லநான்
ஒருகிளை மறுகிளை தாவிப்பறக்க

இறக்கையும் முளைத்தவுடன்—ஓ ஓ!
இலைகிளை நிறைந்ததே உலகமென்றேன்
ஆகாயம் அளவும்இப்போ—உயரத்தில்
ஆநந்த மாய்ப்பறக்க அறிந்தவுடன்
உலகமோ மிகப்பெரிதாய்—உண்மைஒன்றும்
உணரவே முடியாமல் விரிந்ததென்னே! 19

பயிர் வேலை

வேலை எதற்கும் சிறந்ததென
வேண்டப் படுவது பயிர்வேலை
ஏரால் உழுது நிலம்திருத்தி
என்றும் நல்ல உழைப்பெடுத்துப்



பயிர்செய் துண்ணும் பண்புடையார்
பாரில் யார்க்கும் நண்புடையார்
உழுவார் என்றும் இரவார்கள்
உற்றோர்க் கீவதிற் கரவார்கள்


கலிலியோ

ஐசக் நியூடன்


ஜேம்சு வாட்


எடிசன்

காக்ஸ்டன்

எல்லாந் துறந்தார் வாழ்வதுவும்
ஏரின் செல்வத் தாலென்பார்
வாழ்வார் என்பார் உழுதுண்பார்
மற்றவர் எல்லாம் தொழுதுண்பார்

ஆதலாலே பிள்ளைகளே
அரிய பயிர்த்தொழில் இதுவொன்றே
நாட்டில் உயர்ந்த தொழிலாகும்
நாடி உழைத்தால் நலமாகும்.

அறிஞர்களும் பொறிகளும்

அச்சுப் பொறியினால் ஆகும்நன் மையெல்லாம்
ஆராய்ந்து காக்ஸ்டன் எனும்பெரியார்
மெச்சும் வகையினால் அச்சிடும் நற்றொழில்
மேதினி தன்னிலே கொண்டுவந்தார்.

சூரியன் நிற்பதும் பூமி சுழல்வதும்
துன்னும் இராப்பகல் ஆவதுவும்
சீருடன் ஆய்ந்த கலிலியோ கண்டனர்
சேண்பொருள் காணுங் கருவிதன்னை.

நீராவி தன்னால் இயந்திரம் போக்கும்நல்
நீர்மையை ஜேம்சுவாட் கண்டனரே
பாரின் வசீகர சத்தியின் மேன்மையைப்
பார்த்தறிந் தார்ஐசக்நியூட னென்பார்.

பேசும் ஒலியைப் பரப்புங் கருவியும்
பேணுநல் இன்னிசைப் பெட்டியெனும்
ஏசலில் லாத பொறிபிற வுங்கண்டார்
எடிசன் என்னும்பெய ரேற்றவரே. 21

வானவூர்தி



வானவூர்தி

ஓடி விளையாடும் பாப்பா—நீ
உயர நிமிர்ந்தெனைப்பார் பாப்பா
கூடி விளையாடும் பாப்பா—நான்
கொஞ்சும் பறவையன்று பாப்பா
பாடி மகிழ்ந்திடுவாய் பாப்பா—நான்
பறந்து சுழன்றிடுவேன் பாப்பா
நாடித் தபாலெடுப்பேன் பாப்பா—முன்னே
நல்லபேர் எடுத்தேனடி பாப்பா.

பாப்பா நீ கடலினில் பார்ப்பாய்—மெல்லப்
பலப்பல கப்பல்களைப் பார்ப்பாய் ;
பாப்பா நீ நிலத்திலே பார்ப்பாய்—இருப்புப்
பாதையின்மேல் ரயில்களைப் பார்ப்பாய்
பாப்பா நான் அவற்றினும் விசையாய்-வானில்
பறந்து விரைந்திடுவேன் பார்ப்பாய்
பாப்பா நீ ஆராய்ந்து பார்ப்பாய்—எனக்குப்
படிதனில் ஒப்பார்யார் பாப்பா.

பாழும் மனிதரெனைப் பாப்பா—கொடும்
போருக் கழைத்தாரடி பாப்பா
ஆழும் படிநகரைப் பாப்பா—நான்
அழித்தெரித்த பாவியடி பாப்பா
சூழும்என் பேருரைத்தால் பாப்பா—மக்கள்
சூழ்ந்து நடுங்குகின்ருர் பாப்பா
ஆழ எனைக்காணும் பாப்பா—நான்
ஆரென் றுரைத்திடடி பாப்பா. 22

அன்னையின் அன்பு

("நாதர்முடி மீதிருக்கும்" என்ற மெட்டு)

என்னை அன்பாய்ப் பெற்றெடுத்த அன்னையாரே!
இன்னமுதப் பால்கொடுத்த அன்னையாரே!
பொன்னின் நல்ல தொட்டிலிட்டு என்னை ஆட்டினய்,
பொங்குதமிழ்ப் பாட்டுப்பாடி இன்பம்ஊட்டினய்!

நான்வருந்த நீமருந் தருந்தல்என்னவோ,
நல்லவன்நான் வாழவேண்டும் என்றஎண்ணமோ!
வான்உலாவும் வட்டமதி தன்னைக்காட்டினாய்,
வண்ணவண்ண ஆடைமணி ஆரம்பூட்டினாய்!



கையிலென்னை ஏந்திமுகங் கண்டுமகிழ்ந்தாய்,
கண்மணியே, செல்வமே!என் றென்றுபுகழ்ந்தாய்!
மெய்யிலென்னைக் கொண்டணைத்து முத்தங்கொடுத்தாய்
மேன்மையான பாலும்சோறும் நித்தங்கொடுத்தாய்.

என்சிறிய மழலைகேட்டு இன்பம்ஊறினாய்!
இளநடையே கண்டுனது துன்பம்ஆறினாய்!
உன்கருணை இன்றிநானும் உய்வதும்உண்டோ,
உலகில்உன்னை அன்றிவேறு தெய்வமும்உண்டோ! 23

செயத்தகுவன

("புத்திகெட்ட பூனை இரண்டு" என்ற மெட்டு)

கள்ள முள்ளது காக்கை
காக்கத் தக்கது யாக்கை
பள்ளத் தில்நீ ரோடும்
படிப்பால் அறிவு கூடும்
கள்ளியி லேபா லுண்டு
கற்ருேர்க் குச்செய் தொண்டு
குள்ளேயர் மெள்ளச் செல்வார்
குழந்தைகள் மெய்யே சொல்வார். 24

கல்வியின் சிறப்பு

எந்நாளும் அழியாத
இருஞ்செல்வம் கல்வியென்பார்
நன்ருகும் நாற்பொருளும்
நாடிவரும் இதனுலே.

எண்ணினுடன் எழுத்துணரா
ஏழையர்தம் கண்களினேப்
புண்ணென்றே உலகுரைக்கும்
பொய்யன்று இவ்வுரையே.

தோண்டுவதால் மண லூறும்
தூநீரின் தகைபோல
வேண்டியுணர் கல்வியினல்
விளேயும்நல்ல அறிவென்பார்.

உடையழகும் நடையழகும்
உருவழகும் அழகல்ல
நடுநிலைமை தருங்கல்வி
நல்லழகே அழகாமே.

வாழ்நாளோ சிறிதளவாம்
வருத்துபிணி பெரிதுளவாம்
ஊழ்போக்கும் உயர்கல்வி
உணராத செயல்என்னே.

கண்போன்ற பலநூல்கள்
கருத்தாகப் பயிலாதார்
மண்பாவை போலிந்த
மாநிலத்தில் கிடப்பாரே! 25

நன்னெறி

ஒழுங்குடைமை

ஆடும் பொழுதும் ஓரிடத்தே
அமரும் பொழுதும் விளையாடி
ஓடும் பொழுதும் வரும்பொழுதும்
ஒழுங்கு சிறிதும் தவறேமே.

தூய்மை

கந்தைத் துணியே யானாலும்
கசக்கித் துவைத்துக் கட்டிடுவோம்
எந்த உணவே யானாலும்
இட்டதை உண்டு இருப்போமே.

நோயே யில்லா வாழ்வஃதுவே
நோக்கின் செல்வ வாழ்வாகும்
ஆய வதனல் முகங்கைகால்
அனைத்தும் தூய்மை செய்வோமே.

பெற்ருேர்ப் பேணல்

அப்பா என்ன செப்பிடினும்
அம்மா என்ன மொழிந்திடினும்
செப்போம் ஒன்றும் மாருக
செய்யோம் ஒன்றும் வேருக.

இரக்கம் உடைமை

அன்பே இன்பம் தரும்பொருளாம்
அன்பே கடவுள் தன்னுருவாம்
அன்பே எல்லாம் ஆதலினல்
அதனை மறவோம் மறவோமே.

பொய்யாமை

அருளே வருவ தாயிடினும்
பொருளே வருவ தாயிடினும்
புகழே வருவ தாயிடினும்
இகழே வருவ தாயிடினும்

இன்பம் வருவ தாயிடினும்
துன்பம் தொலைவ தாயிடினும்
மெய்யே அன்றி எப்பொழுதும்
பொய்யே புகலோம் புகலோமே. 26

அச்சமில்லை அச்சமில்லை

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
அறிவுடையா னொருவனுக்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)
ஆண்டவனை நம்புவார்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)
இச்சைதனை அற்றவர்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)

ஈகல்இசை என்பவர்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)
உண்மைபேசும் ஒருவனுக்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)
ஊக்கமுள்ள ஒருவனுக்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)

எண்ணிஎண்ணித் துணிபவர்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)

ஏரேசெல்வம் என்பவர்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)

ஐயமறக் கற்றவர்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)

ஒழுக்கம்உயிர் என்பவர்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)

ஓதுநா உடையவர்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)

ஔவைவழி நடப்பவர்க்கு
அச்சமென்ப தில்லையே (அச்ச)

அஃகமென்றுந் தேடுவார்க்கு
அச்சமென்ப தில்லையே. (அச்ச) 27

கற்கை நன்றே

[குறவஞ்சி மெட்டு, புன்னுகவராளி, பியாகு, கல்யாணி
முதலிய இசையிற் பாடுக]

("எங்கள் முத்துமாரி" என்ற மெட்டு)

எல்லோரும் கல்விகற்போம்
இனியதமிழ் நாட்டீர்!
கல்வியில்லார் உலகினிலே
கடையரெனத் தாழ்வார். (எல்)

எண்ணெழுத்தும் கண்களன்றோ
இதையறியார் உண்டோ
பெண்களுமே ஆண்களைப்போல்
பெறவேண்டும் அறிவை. (எல்)

இருளடைந்த வீட்டினிலே
இன்பம்என்றும் உண்டோ
தெருளில்லார் வாழ்க்கையிலே
திருவுடைமை உண்டோ. (எல்)

ஆளழகும் அணியழகும்
அறிவழகுக் கிணையோ
தோலழகால் யாதுபயன்
சுவையழகே கனியாம். (எல்)

நாலெழுத்துக் கற்றுக்கொண்டால்
நல்லதுண்டு வாழ்வில்
காலமெல்லாம் பொன்னாக்கிக்
கல்வியினை வளர்ப்போம். (எல்)

உலகமெங்கும் கல்வியினை
உயிரெனக்காக் கின்றார்
பலகலைகள் பயிலுகின்றார்
பண்புடன்வாழ் கின்றார். (எல்)

பதினைந்தில் ஒருவர்கூடப்
படிக்கவில்லை இங்கே
இதுநமக்கு வெட்கமன்றோ
முதியதமிழ் நாட்டீர்! (எல்)

நல்லநல்ல நூல்களிங்கே
நயமுடனுண் டறிவீர்
சொல்லறியா ஊமரெனத்
தோன்றலுமக் கழகோ. (எல்)

வள்ளுவரும் ஔவையாரும்
வந்ததமிழ் நாட்டீர்
தெள்ளியதேன் போற்கவிதை
செழித்ததமிழ் நாட்டீர்! (எல்)

கல்விகற்க விரைந்திடுவீர்
கன்னித்தமிழ் நாட்டீர்
கல்வியொன்றே நாமெல்லாம்
கடைத்தேறும் வழியாம். (எல்)

சாதிமதச் சண்டையில்லை
சரிநிகராய் யாரும்
பேதமறக் கல்விகற்போம்
பிரிவினையை ஒழிப்போம். (எல்)

வீடுதொறும் கல்வியெனும்
விளக்கேற்றி வைப்போம்.
வாடுகின்ற மன்னுயிரின்
வறுமையினைத் தீர்ப்போம். (எல்)

எண்ணறிவீர் எழுத்தறிவீர்
இயற்கலைகள் அறிவீர்
பண்ணறிவீர் பயனறிவீர்
பதிநூல்கள் அறிவீர்! (எல்)

பொல்லதெல்லாம் போயொழியும்
புண்ணியங்கள் பொலியும்
நல்லதெல்லாந் தேடிவரும்
நந்தமிழைக் கற்றால். (எல்)

பொன்னளிக்கும் பொருளளிக்கும்
புகழெல்லாம் அளிக்கும்
சன்மார்க்க வாழ்வளிக்கும்
சத்தியமாங் கல்வி. (எல்)

கற்கைநன்றே கற்கைநன்றே
கைப்பிச்சை யேற்றும்
கற்றவர்க்கே வெற்றியுண்டு
கல்விகற்க வாரீர்! (எல்) 28

இலக்கணம்

இலக்கணம் இலக்கணம் என்போமே
இனிய கலைஅது என்போமே
செந்தமிழ் இலக்கணம் அதனிலுமே
திருந்திய இலக்கணம் எதனிலுமே
ஏனெனின், இயற்கையின் படமதுவே
எல்லாம் அடங்கிடும் இடமதுவே
இயற்கையில் உடம்புண்டு உயிருண்டு
எழுத்திலும் உயிர்மெய் இனமுண்டு
உலகத்தில் குறியர் நெடியருண்டு
உயிரெழுத் திலும்குறில் நெடிலுண்டு

உலகத்தில் மெலியர் வலியருண்டு
உண்மையில் இடைத்தர உடம்புமுண்டு
மெய்யெழுத் தெல்லாம் இங்ஙனமே
மெல்லின வல்லின இடையினமாம்
என்னே! இலக்கணத் தமிழ்மொழியே
இதைப்போலுண்டோ பிறமொழியே! 29

செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெங்கள் நாடே—உயர்
தேவரும் போற்றுபொன் னாடே.
வந்தனே புரிவமெப் போதும்—இது
வானிலும் மாண்புயர் நாடே.

ஆண்டவன் ஆண்டபொன் னாடு—எங்கள்
அருளுடைப் பாண்டியன் நாடு
நீண்டசீர்ச் சோழநன் னாடு—என்றும்
நிலவிசைச் சேரநன் னாடு.

கொடையிற் சிறந்தநற் பாரி—உயர்
குமணன் முதற்பலர் நாடு
நடையிற் சிறந்தநல் லோர்கள்—உயர்
ஞானியர் வீரர்கள் நாடு.

கற்புடைக் கண்ணகி நாடு—எம்
கண்மணி ஆண்டாளின் நாடு

பொற்புடைக் கன்னியர் நாடு—எம்
புண்ணியத் தாய்த்தமிழ் நாடு.

காவிரி சீர்மிகு நாடு—உயர்
கடவுளர் வைகைநன் னாடு
பூவிரி பொருநைநன் னாடு—எங்கள்
புண்ணியத் தாய்த்தமிழ் நாடு.

முத்தமிழ் நாடுயர் நாடு—எங்கள்
முருகன் திருப்புகழ் நாடு
சித்தரும் முனிவரும் என்றும்—இங்குச்
சேர்ந்துறை தெய்விக நாடு.

தமிழ் நாடு

"பச்சைமலை பவளமலை" என்ற மெட்டு)

எங்கள்தமிழ் நாட்டின்வளம் எடுத்துரைப்போம் கேளீர்
இயற்கைவளம் செயற்கைவளம் எங்குமுள்ள நாடு
தெங்குபலா மாகமுகு நன்குவளர் நாடு
தீம்பலவின் தேனொழுகச் செந்நெல்வளர் நாடு
மங்குல்தவழ் மாளிகைகள் மன்னியசீர் நாடு
மங்கையர்கள் பாடிநட மாடுகின்ற நாடு
சங்கமிருந் தறிவுடையோர் தமிழ்வளர்த்த நாடு
தமிழ்மொழியைத் தாய்மொழியாய்ப் பேசுவதெம் நாடே.

தமிழ்மொழி வாழ்த்து

("மாற்றறியாத" என்னும் மெட்டு)

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகண்ணா வயங்குநன் மொழியே
தானியல் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே. 32

தமிழ்த்தாய்த் திருப்பள்ளு

("ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்ற மெட்டு)

(பல்லவி)

போற்றுவோமே பணி யாற்றுவோமே
பூதலமதனிலே தமிழ்த்தாய் பொலிந்திடப்(போற்று)

(சரணங்கள்)

காப்பியங்கள் பலவற்றைக்
கண்டுபிடிப்போம்—நல்ல
கருத்தினை மக்களிடை
விளக்கியுரைப்போம்—தொன்மைக்

காப்பியம் பன்முறையே
நன்குபடிப்போம்—அங்குக்
காணும் பொருளியல்கள்
நன்குவிரிப்போம் (போற்று)

வள்ளுவரை முடிமீதே
வைத்துப்போற்றுவோம்—அவர்
வழுத்திய உரைகளை
அழுத்தமாய்க்கொள்வோம்—நெஞ்சைக்
கொள்ளைகொள்ளும் வாசகத்தை
அள்ளிக்கொள்ளுவோம்—அன்பு
கொழுந்துவிடுங் கோவையாரில்
அழுந்திமூழ்குவோம் (போற்று)

எட்டுத்தொகை நூல்களையே
எடுத்துப்படிப்போம்—முன்னோர்
ஏற்றமதை நாற்றிசையும்
எடுத்துவீசுவோம்—சங்கம்
பத்துப்பாட்டு நூல்களை நாம்
படித்துமகிழ்வோம்—அவண்
பகர்கின்ற நாகரிகம்
பரப்பிஉய்குவோம் (போற்று)

கண்ணகி நூல் படித்துநாம்
கருத்தினில்வைப்போம்—புத்தர்
கருத்துநிறை மணிமேகலை
பொருத்தமாய்க்கொள்வோம்—விருத்த

ஒண்பாவில் உயர்கம்பன்
உரைத்துமேவைத்த—ஒழுக்
குயர்ராம காதையினை
உள்ளத்தேகொள்வோம் (போற்று)

ஆங்கிலத்திற் காணுகின்ற
அருமைநூல்களை—உயர்
அரிய மொழிபெயர்ப்பால்
உரியவாய்க்கொள்வோம்—சிலர்

பாங்குள்ள தமிழ்த்தொடரில்
பிறமொழிசேர்த்து—நம்மைப்
பாழ்படுத்தும் வழிகளை
ஆழ்த்தியொழிப்போம் (போற்று)

நூல்நிலயம் நாடெங்கும்
நிறுவியேவைப்போம்—தமிழ்
நூல்களை நிரப்பியே
அறிவைவளர்ப்போம்—புதுத்

தாள்கள் பலவற்றைச்
சேர்த்துவைத்துமே—தொலை
தங்குமக்கள் செய்திகளை
இங்கறிவிப்போம். (போற்று) 33

தமிழர் நாகரிகம்

செந்தமிழ் நாட்டினிலே—வாழ்ந்த
சீருடை மாந்தர்தம் நாகரிகக் கொள்கை

எந்தவகை யுரைப்போம்—அவர்
ஏர்பெற்ற வாழ்க்கையிற் சீர்பெற்ற நாட்களில்

அறிவை விளக்கஞ் செய்யும்—அழ
கார்ந்த ஒண் ணூல்களை ஆராய்ந்தவை காட்டும்
நெறியினிற் சென்றனரே—என்றும்
நிற்கும் புகழுடன் கப்பல் களிற்சென்று

வாணிகம் செய்தனரே—பண்ட
மாற்றி வெளிநாட்டில் மல்கு பலபண்டம்
காண நம் நாடுதந்தார்—கவின்
கம்மத் தொழில்வல்ல காட்சிய ராகையால்

பல்வே றணிகலன்கள்—செய்தார்
பட்டும் பருத்தியும் நுண்மயி ருங்கொண்டு
நல்ல கலைகள் செய்தார்—எழில்
நாட்டும் சிற்பக்கலை நாடெல்லாங் கொண்டாடக்

கோயில் களும்வகுத்தார்—மாட
கூடங் களுங்கொண்ட மாநக ராக்கினர்
தூய புலமையெழ—நூல்கள்
தோற்றும் பலதமிழ்ச் சங்கங்கள் கூட்டினர்

கொல்லுந் தொழிலினுடன்—புலால்
கொள்வதுங் கள்ளையுட் கொள்வதும் நீக்கினர்
நல்ல பசுவினங்கள்—ஓம்பி
நாட்டில் அருட்செல்வம் நாடும் படிசெய்தார்

நாட்டினை யாண்ட மன்னர்—செங்கோல்
நாளும் வளரக் குடிகளைக் காத்தனர்

ஆட்களும் யானைகளும்—எழில்
ஆகும் புரவிகள் தேர்த்திர ளுங்கொண்ட
சேனை களும்அமைத்தார்—பகை
சேரும் அரசரை ஓட்டியும் வென்றனர்
ஆன பயிர்த்தொழிலே—மேன்மேல்
ஆக வளம்படக் காத்தனர் நாட்டிலே

நாடக மேன்மைகண்டார்—இசை
நல்குங் கருவிகள் நாடியே செய்தனர்
பாடுந் தொழில்பயின்ற—தமிழ்ப்
பாவையர் ஆடல் துறையிலுந் தேர்ந்தனர்

இத்தகை மேன்மையினில்—நின்று
ஏர்பெற்ற இந்தத் தமிழகம் இக்காலம்
எத்தகைத் தாயுளது—இவண்
இயம்பும் பழமை மறந்ததென் செய்யவோ! 34

பொங்கல் விழா

பொங்கற் புதுநாள் புகுந்தது—மனம்
பூரித்த தின்பம் எழுந்தது
எங்கும் மணவொலி போலவே—மக்கள்
ஏத்திசைப் பார்கள் சாலவே

செவ்விய வெண்சுதை தீற்றுவார்—இல்லம்
செம்மண் ஒளிபெறப் போற்றுவார்
தெய்வத் திறம்பட எங்குமே—எழில்
சேருங் கோலங்கள் பொங்குமே

வாசலில் கீழ்த்திசை நோக்கியே—நல்ல
வண்ணச் சிறுவீடொன் ருக்கியே
மாசிலாப் பிள்ளையார் செய்துமே—வைத்து
வழிபடு வார்மலர் பெய்துமே

தெங்கிள நீர்இள மாவடு—இனம்
சேரும் கனிவகை மூன்ருேடு

கொங்கு மணங்கமழ் பூத்திரள்—கூடை
கூடையா யெங்கெங்கும் கூட்டுவார்

மஞ்சட் செடிகளுந் தேடுவார்—குலை
வாங்கு கதிர்ச்செந்நெல் நாடுவார்
செங்கரும் பும்புதுக் காய்களும்—தேடிச்
சேரவைத் துப்படைப் பார்களே

சோறுபொங் கியெழும் செவ்வியில்—அவண்
சூழநிற் கும்இள நவ்வியர்
கூறுவர் பொங்கலோ பொங்கலோ—என்று
கூவிடு வார்இன்பம் பொங்கவே.

தங்கி மழைநலம் ஓங்கவே—எங்கும்
தங்கும் பசிப்பிணி நீங்கவே
செங்கதிர்த் தெய்வத்தைப் போற்றுவார்—வளம்
சேரக் கொழிக்கவே சாற்றுவார்

ஆடு மாடுகன்று காலிகள்—பிணி
யாதுமில் லாமல்சீர் சாலவே
நாடு முழுவதும் பொங்கலாம்—இந்த
நாளை எல்லோரும் விரும்பலாம்.

பொங்கல் வாழ்த்து

பொங்குக! பாலுஞ் சோறும்
பொலிவுறு வளங்கள் யாவும்
பொங்குக! மாடுங் கன்றும்
மற்றுள செல்வம் யாவும்

பொங்குக! அன்பும் இன்பும்
புகழ்மிகு நலங்கள் யாவும்
பொங்குக! பேரும் சீரும்
பொங்கலோ பொங்கல் என்றே. 36

உண்ணு முறை

உண்ணும் முறைசொல்வேன் கேளாய்
உணர்ந்தே அதன்வழி நீளாய்
பெரியோர் இடதுகைப் பக்கம்
பேணி அமர்புகழ் நிற்கும்
கையை நிலத்தில்ஊன் றுமல்
காலை மடக்கிஊன் றுமல்
செவ்வை யாகவே அமர்வாய்
சீராய்க் கிழக்குமுகந் தேர்வாய்
எண்ணிக் கடவுள் அடிவாழ்த்தி
எடுத்துக் கவளம் வாய்சேர்த்து
மெல்ல வேமென் றுமிழ்நீரால்
வேண்டும் பதம் செய்து சீரால்
மெதுவாக உண்ணு வாயே
விரைந்து செரிக்கும்உணர் நீயே
தித்திப்புப் பொருள்கள் முதலும்
சேர்கசப்புப் பொருள் ஈறும்
மற்றவை யாவும் இடையும்
வகுத்துண்டால் தீமை உடையும். 37

ஊசல் ஆட்டம்

(இராகம் - கல்யாணி. தாளம் - ஆதி.)

பல்லவி

ஊசலாடுவோம்—நல்ல—ஊசல் ஆடுவோம்

அநுபல்லவி

சின்னஞ்சிறு பாவையரே
செல்வமிக்க பூவையரே (ஊச)

சரணங்கள்

பூவலரும் சோலையிலே
பொங்குமெழில் மாலையிலே
நாவலரும் பாடல்பாடித்
தேவரும் மயங்கத்தங்கி (ஊச)

பழைய நாளில் பெருமைகொண்டோம்
பகரும்நடுவில் சிறுமைபூண்டோம்
பழையகாலம் போலப்பெண்கள்
பலவகையினும் உயர்ந்தாரென்று (ஊச)

நல்லஎழிலும் அறிவும்ஓங்க
நாளும்பொல்லாக் குணம்பின்வாங்கக்
கல்விக்கரசி புகழும்தேங்கக்
கருதிஇகழ்வார் எவரும்தூங்க (ஊச)

தமிழர்நாக ரீகமோங்கத்
தமிழ்மொழியின் பெருமைவீங்க
அமையும்நாட்டின் சிறுமை நீங்க
அனைவரும்ஒன் றாகியோங்க. (ஊச) 38

கும்மி யடித்தல்

கும்மியடி பெண்ணே கும்மியடி பெண்கள்
கூட்டம் கலந்து கும்மியடி
செம்மையே சேரும் செந்தமிழ் அன்னையின்
சீரினைப் பாடியே கும்மியடி

நாடு பெருக்கமும் பெண்ணாலே—அந்த
நாடு முன்னேற்றமும் பெண்ணாலே
வீடு விளக்கமும் பெண்ணாலே எனும்
வேடிக்கை எண்ணியே கும்மியடி

கல்வித் தலைவியும் செல்வத் தலைவியும்
காணு மிடத்தினில் பெண்ணாவார்
கல்வியும் செல்வமும் பெண்கள் வழியெனக்
கண்டமை தோன்றநீ கும்மியடி

வீரமிகுந்த தமிழ்நாட்டில்—வீர
மெல்லிய லார்வழி யிற்பிறந்தோம்
வீரமும் தீரமும் நம்பொருள் என்றிதை
விண்டு மகிழ்ந்துநீ கும்மியடி

கையில் அணிந்த வளைகுலுங்க—எழில்
காணும் உடலில் வியர்வரும்ப
தெய்வத் தமிழன்னை சேவடி பாடிநீ
சீருட னேபெண்ணே கும்மியடி (கும்மி)

பந்தாட்டம்

ஓடியாடுவோம்—சேர்ந்து—ஓடியாடுவோம்
ஆடிப்பாடி நாடிப்பந்தை ஓடியாடுவோம்

உள்ளம்ஓங்கவே—மகிழ்—துள்ளியோங்குமே
கள்ளமின்றிப் பந்தடிக்கக் கருதிவாருமே

நிலத்தில்வீசியே—பந்தை—நின்றடிப்பதால்
தலத்தினின்று மீண்டெழும்பித் தாவும்ஓங்கியே

வெள்ளைப்பந்தொடு—செம்மை—மேவும்பந்தெலாம்
பிள்ளைகள்எல் லாரும்சேர்ந்து பிறழ்ந்தடிப்போமே

கைசிவக்கவே—உடல்—கருதிவேர்க்கவே
பெய்துபெய்து பந்தடிக்கப் பெரிதும்மகிழ்விதே

பந்தடிப்பதால்—உடலில்—பரவும்வலிமையே
மந்தமான செயலொழிந்து மலரும்புலமையே

உடல்அமைப்பினில்—எழும்—உண்மைஅழகொடு
திடம்அமைந்த நெஞ்சமோடு சீரும்திகழுமே.

கோலாட்டம்

(இரா - காம்போதி. தாளம் - அடதாளம்)

பல்லவி

அருமையான தோழியரே
ஆடுவோம் கோலாட்டமே

அநுபல்லவி

ஆடுவோம் கோலாட்டமே
அகவருத்தம் ஓட்டமே (அரு)

சரணங்கள்

பெருமைசேர்நம் நாட்டில்வாழும்
பெண்மணிகள் யாருமே
சிறுமை நீங்கிச் செல்வமோங்கத்
திருவருள் பெருகவெண்ணி (அரு)

வீரம்கல்வி செல்வமும்
மேவும்நல்ல பொருளெல்லாம்
தீரஎண்ணில் பெண்கள்பண்டு
தேடிக்கண்ட செல்வமென்று (அரு)

வெள்ளிவீதி என்னும் புலமை
மெல்லியலும் ஔவையும்
எள்ளல்இல்லா எங்கள்முன்னோர்
ஆவரென்னும் ஏற்றம்கூறும் (அரு)

நாணமே முதன்மையான
நல்லநான் கொழுக்கமும்
பேணிஎன்றும் உரிமையாகப்
பெறுவதேநம் செல்வமென்று (அரு)

நாடகம்

("ஆடு பாம்பே" என்ற மெட்டு)

ஆடுமயிலே ஆடுமயிலே
அழகிய தோகைவிரித் தாடுமயிலே



பாடுகுயிலே பாடுகுயிலே
பண்டைத் தமிழிசையைப் பாடுகுயிலே

போடுமுகிலே போடுமுகிலே
பொருந்த மிருதங்கம் போடுமுகிலே

நாடுமனமே நாடுமனமே
நாடகக் காட்சியினை நாடுமனமே. 42

கட்டை இடுப்பில் துட்டுண்டோ

ஒருநாள் செட்டி மூடனுடன்
ஒன்ருய்க் கூடிப் போகையிலே
வழியில் பொழுது மறைந்ததனுல்
மைதா னத்தில் உறங்கினரே



அப்போ திருளில் திருடர்சிலர்
அங்கே செல்ல வழிநடுவில்
மூடன் மீது கால்இடற
முரட்டுக் கட்டை இஃதென்ருர்

அதனைக் கேட்டான் மூடனுமே
அடங்காக் கோபங் கொண்டுடனே
கள்ளர் களுக்கும் அறிவுண்டோ !
கட்டை இடுப்பில் துட்டுண்டோ
என்றிடும் சொல்லைக் கேட்டார்கள்
ஏ ! என வந்து பறித்தார்கள்
இந்தப் பணமும் செல்லுவதோ
என்றலும் மூடன் சொல்லுகிறான்
செல்லும் செல்லா ததற்கறிவீர்
செட்டியார் உள்ளார் செடிமறைவில்
என்றது கேட்டுச் செட்டியையும்
எட்டிப் பறித்துப் போயினரே ! 43

எறும்பும் புறுவும்

ஆற்றினிலே வெள்ளம் பெருகி
அலைகள் புரளுதே
அதிலோர் எறும்பு தத்தளித்து
அலைந்து உருளுதே
அலையும் எறும்பு கரையில்சேர
ஆசை கொண்டதே
அங்கோர் ஆல மரத்தில்புறு
அமரக் கண்டதே
அண்ணா ! என்னைப் பாதுகாக்க
அன்பு காட்டிடாய்

அலகில் மரத்தின் இலையைப்பறித்து
அருகில் போட்டிடாய்
என்று புலம்பும் எறும்பின் துயரை
இனிது கேட்டது
இலையில் ஒன்றைப் பறித்துப்புரு
எளிதில் போட்டது



காற்றும் இலையை எறும்பின்பக்கம்
கடிதில் சேர்த்ததே
களிக்கும் எறும்பு தெப்பமேறிக்
கரையைப் பார்த்ததே

உயிர்கொடுத்த புருவை எறும்பு
மறக்க எண்ணுமோ
உயர்ந்த நேசம் பெற்றஇருவர்
பிரிய ஒண்ணுமோ
புருமரத்தில் எறும்பு புற்றில்
கொண்ட இருப்பிடம்
பொருந்தும் அவைகள் பேசிமகிழ்ந்து
புதுமை பெருக்கிடும்

(வேறு)

இப்படி இவைஇருக்க—ஒருநாள்
எங்கும்இரை காணமல் அலைந்தவேடன்
அந்தவழி வரும்போது—கிளையினில்
அமர்ந்துள்ள புருவைக் கண்டுமகிழ்ந்தான்
கைதனில் வில்லைஎடுத்தான்—அம்பை அவன்
கடிதினில் விடமிகக் குறிதொடுத்தான்
பார்த்து எறும்படடா !—நேசனுயிர்
போகாத படிவேடன் பதறிடவே
சுறுக்கென்று கடித்ததுவே—வேடன்குறி
தவறிப் புருமகிழ்ந்து பறந்ததுவே
ஆதலால் நாம்செய் நன்றி—என்றும்
ஆபத்தில் உதவியாம் கண்டுகொண்டீர்
தாம்பிறர்துயர் தீர்க்கவேண்டும்—வேண்டில்
நாம்உயிர் கொடுத்தேனும் நலம்காத்தல்வேண்டும்.

இரக்கமுள்ள இளைஞன்

முத்து முதிர்ந்து நரைத்துத் திரைத்து
முதுகு வளைந்த கிழவி
காற்றும் மழையும் வீசி அடிக்கக்
கலங்கு கின்றாள் வழியில் ;

குளிரில் நடுக்கம் கொண்டு கையில்
கோலை யூன்றிச் சென்றாள்
கொடிய மழையின் இடிக்குப் பயந்து
குமுறிப் பதைக்கும் நெஞ்சாள் !

வயது தளர்ந்து வலிமை குறைந்து
வாடி மெலிந்த நடையாள்
வருத்தும் மழையில் இருக்க நேர்ந்த
வாட்டம் பெரிதும் உடையாள்.

ஓய வில்லை ஒழிய வில்லை
ஒரே வேகம் மழையே !
ஒருவர் கூட அறிய வில்லை
ஓ ஓ ! கிழவி நிலையே !

மிகுந்த வானம் பொழியப் பயந்து
வெருண்டு நின்று கொண்டாள் ;
விரைந்து பலபேர் அவளை உராய்ந்து
வேக மாகச் சென்றார்.

பள்ளிக் கூடம் விட்ட வுடனே
பாலர் செல்லுங் கூட்டம்

பக்கத் திருந்த கிழவி துன்பம்
பாரா தெடுத்தார் ஓட்டம்.
பனித்த விழியும் நனைத்த துணியும்
பார்க்கச் சோர்ந்த நிலையே !
பாவம்! கிழவிக் குதவி புரியப்
பாலர் யாரும் இலையே !

அப்போ தருகில் ஓடும் குதிரை
வண்டி அவளின் மீதே
அடித்து மோதக் கிழவி வீழ்ந்தாள்
ஆ ! ஆ ! அந்தப் போதே.
விழுந்த அவளைக் காணப் பலபேர்
வேக மாக மொய்த்தார்
விரைந்து உதவி செய்ய யாரும்
விரும்பி மனது வையார் !

அங்கு வந்த இளைஞர் கூட்டத்
தறிவில் ஒருவன் உயர்ந்தான்,
அவனைச் சூழ்ந்த அனைவ ரையும்
அகற்றி உதவி புரிந்தான். 45

ஆலமரமும் நாணலும்

ஆற்றங் கரை அதனில் அழகான ஆலமரம்
நாற்புறமும் விழுதாகி நன்றாய்ப் பரந்ததுவே.



ஓங்கி வளர்ந்திருந்தே ஒன்றாய்த் தழைத்திடவே
பாங்கில்சென் றோரெல்லாம் பண்பாய்ப் புகழ்ந்தாரே.

அங்கே நாணல்புல்லும் அருமையாய்ச் செழித்தோங்கி
மங்காச் சிறப்போடு மாண்பாய் வளர்ந்தனவே.

வெள்ளம் பெருகிவந்தால் வெள்ளம் ஓடும்வழியே
மெள்ள வளைந்துவிடும் மெள்ள நிமிர்ந்துவிடும்.

காற்று வீசும்போது கடுகித் தலைசாய்க்கும்
காற்று வீசிநின்ருல் கடுகித் தலைநிமிரும்.



ஆல மரம் அதனை ஆற்ற இகழ்ந்துபேசித்
தோற்ருய் பலமுறையும் தோல்வி எனக்கில்லை.



சீச்சீ எனைப்பாராய் சிறப்பாய் நிற்கின்றேன்
ஏச்சும் பலகூறி ஏமாப் புடன்இருக்க.

நாணல் இதைக்கேட்டும் நாணமல் இருந்துவர
கோணல் பெருங்காற்றுக் கொடுமையாய் ஒருமாலே.

சுழன்று சுழன்றடித்துச் சுற்றிலும் வீசியதே
சுழன்றே பலமரங்கள் சுற்றிலும் வீழ்ந்தனவே.

வளையாத ஆலமரம் வளைந்து அலைந்தலைந்து
கிளைகள் ஒடிந்துவிழக் கீழ்வேரும் அற்றுவிட.

முறிந்து விழுந்ததுவே முன்போல நாணல்களோ
சிறிது வளைந்திருந்து சிறப்பாய் நிமிர்ந்தனவே.

அடக்கம் அமரராக்கும் ஆன்றோர் பழமொழியாம்
அடக்கம் உடையவரே அழியாது வாழ்ந்திடுவார். 46

பாரி வள்ளல்

இல்லையென்று கூறுமல்
எடுத்தீயும் குணமுடையார்
என்றைக்கும் இறவாத
இசையுடையார் என்பாரே.

தமிழ்நாட்டில் அரசாண்ட
தனிவேந்தர் மூவரினும்
தன்புகழே பெரிதான
தவம்கொண்டான் பாரியென்பான்.

எந்நாளும் இரவலர்க்கு
வேண்டுவன எடுத்தீந்தான்
மன்னுத உலகத்தில்
மன்னியநல் புகழ்சேர்ந்தான்.

பறம்புமலை இருப்பிடமாய்ப்
பாராண்டான் பாவலராம்

அறம்புகலும் கபிலரெனும்
அந்தணர்க்கு நண்பானன்.

முல்லையிளம் கொடியொன்று
முளைத்தெழுந்து படர்வதற்குக்
கொம்பின்றி அசைந்தலைந்த
குறிப்பொருகாற் கண்டிரங்கித்;

தான் ஊர்ந்த பொற்றேரைத்
தனிக்கொடிபால் நிறுத்தி அது
தான் அதன்மேல் படர்ந்தேறத்
தனிவேந்தன் செய்திட்டான்.

ஓரறிவாம் உயிரிதன்பால்
ஒப்பில்லா அருள்செய்த
பாரியைப்போல் உலகத்தே
பண்புடையார் யாருமிலர்.

ஞாலத்தில் பாலர்களே
நன்கொடைக்கே பாரியென்று
சீலத்தால் திருநாளும்
சிறப்பாகச் செய்கின்றார். 47

பேகன்

பழையபழைய நாளிலே
பகரும்இந்த நாட்டையே
அரசர் பலரும் புகழவே
ஆண்டான்பேகன் என்பவன்

கருணைசேரும் நெஞ்சமும்
கனிந்துநோக்கும் கண்களும்

உரிமையாகக் கொண்டவன்
உயரும்நல்ல பேகனே

சோலையில் உலாவவே
சூழ்ந்துமன்னன் சென்றனன்
மாலைபெய்த மழையினல்
மனமகிழ்ந்த ஓர்மயில்

தோகையைப் பரப்பியே
தோன்றஆடும் காட்சியைப்
பேகன்கண்டு குளிரினால்
பெரிதுநடுக்கம் கொண்டதே

குளிரைப்போக்கும் கொள்கையே
குணம்எனத்தான் கொண்டனன்
களியுடன்தன் போர்வையால்
கனிந்துமயிலைப் போர்த்தனன்

பேகனைப்போல் நாமுமே
பேணும்உள்ளக் கருணையால்
ஆகும்எல்லா உயிரையும்
அணைத்துக்காத்தல் கடமையே. 48

பேராசை பெருமோசம்

பேரா சையினால் நாயொன்று
பெரிதும் இரையைத் தேடிநொந்து
ஊரில் திரிந்து திருடியதோர்
அப்பத் துண்டை வாய்கௌவி

செல்லும் வழியில் ஓர்மடுவைச்
சென்று கடக்கப் போட்டதொரு
நல்ல பாலம் வழியாக
நடந்து சென்ற நாய்நீரில்

எட்டிப் பார்த்துத் தன்னிழலே
இருக்கக் கண்டே அதன்வாயில்

அப்பமும் இருக்கக் கண்டதனை
எட்டிப் பிடிப்பேன் எனஎண்ணி



எழுந்து நீரில் பாய்ந்ததுவே
இருந்த அப்பமும் வீழ்ந்ததுவே
அழுந்திச் சேற்றில் மாய்ந்ததுவே
ஆசை முழுதும் தீர்ந்ததுவே. 49

சோம்பேறிப் பையன்

பள்ளிக் கூடம் செல்லாத
பையன் ஒருவன் சோம்பலுடன்
எங்கும் திரிந்து விளையாட
யாருங் காணுன் என்செய்வான்
சோலை மேவி ஈக்களினைச்
சூழ்ந்தே வருவீர் என்றுனே

நாங்கள் இரையைத் தேடுவதில்
நாட்டம் கொண்டோம் ஒழிவில்லை

செல்வாய் என்று செப்பியதால்
திரிந்து தேனீ தனைக்கண்டு

அழைத்தான் அதுவும் தேன்சேர்க்கும்
அரிய தொழிலை விடமாட்டேன்

போ போ என்றே கூறியதே
போன இடங்கள் எவைகளினும்

எல்லா உயிரும் தம்தொழிலில்
இசைந்து முயலும் படிகண்டு
“ஐயோ நானும் வீணாக
அறியா திங்கே கெட்டேனே



கல்வி பயிலும் தொழில் நீக்கிக்
கள்ள முடனே விளையாடில்
பின்னால் துன்பம் தரும்” என்றே
பெரிதும் உணர்ந்து நடந்தனனே.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

(நொண்டிச் சிந்து)

ஆட்டுக் குட்டியொன்று—தாகத்தால்
அலைந்தது தண்ணீர் தேடிநின்று
கடைசியில் காட்டினிலே—ஓடையொன்றைக்
கண்டது தண்ணீர் உண்ணவெண்ணி

மேட்டில் இருந்துவரும்—தண்ணீர்
விரைவாய் ஓடும் இடமிருந்தே
நீரை அருந்துகையில்—மேட்டில்
நின்றே கலக்கி நீருண் ணும்



ஓநாய் இவ்வாட்டை—எப்படியும்
உண்டே தீர்வேன் எனவெண்ணி
“ ஓ! ஓ! அறிவில்லா—ஆடே! நான்
உண் ணும் இந்நீரைக் கலக்கியதேன்
என்னை நீ யாரென்று—எண்ணினய் ”
என்னவே குட்டியும் மிகப்பயந்து
“ ஐயா! தாங்கள்உண் ணும்—இடத்தில்
இருந்து கீழேவிழும் நீர்என்னல்

எப்படிக் கலங்கும் இந்த—ஏழையை
எண்ணுமல் மிகவும் கோபிப்பதேன் ''

என்னவே ஓநாயும்—எண்ணமிட்டு
" இருஇரு சென்ற ஆண்டினில் நீ
இதுபோல் செய்ததுண்டு—அதை
எண்ணியே கேட்டேன் '' என," ஐயா

நான்பிறந் தொருதிங்கள்—கூட
நடக்கவில்லை பழி அடுக்கா''தென
நீசெய் யாவிடினும்—உன்றன்
நீண்ட பரம்பரை யில்பலபேர்

என்பால் பிழைசெய்தார்—அதனல்
இன்றுனை அழிப்பேன் எனச்சொல்லி
ஆட்டைக் கொன்றதுவே—சிலர்
அழிக்கவெண்ணில் வீணய்ப் பழிசுமத்திச்

செயலை முடித்திடுவார்—இந்தச்
செய்கையே மிகவும் கைதவமாம். 51

விவேகா நந்தர்

செல்வம் நிறைந்தநம் இந்திய நாட்டின்
சீராம் பெரியோர் புகழ்நோக்கில்—இந்த
நல்ல உலகத்தில் எங்குமில்லை அவர்
நற்குண மேன்மைகள் வாய்ந்தவரே.

வங்காள தேயத்தில் வாழ்ந்தவராம்—எழில்
வள்ளல் விவேகா நந்தரென்பார்

பங்கமில்லாத புகழ்பரப்பி—இந்தப்
பாரில் விளங்கினுர் பண்புறவே.

அமெரிக்கா தேயமுஞ் சென்றனர் இந்தியர்
ஆயுங் கலையைப் புலப்படுத்த—நந்தம்
அருமைத் தவவாழ்வின் அழகெல்லாம் அந்நாடு
அறிந்து மகிழ விளக்கினரே.

கல்வியே இந்திய நாட்டினர் கைப்பொருள்
காணுவீ ரென்றங்கே காட்டினரே—நம்
நல்ல சிலைவழி பாட்டின் உயர்வையும்
நாடி யுணர உணர்த்தினரே.

எங்கும் நிறைந்தவன் ஆண்டவன் அவனுல்
என்றும் நலமே உளதென்ருர்—அப்
பொங்கும் இறைவன் கருணையை அடையப்
பொருந்தும் வழி அன்பின் வழியே யென்ருர்.

கண்ணுக் கெட்டா அந்தத் தேயத்தி லுள்ளவர்
காண நம் இந்தியர் மாட்சிமையை—இவ்வா
றெண்ணி மகிழ எடுத்துரைத் தார் அவர்
இயல்பினை எப்படி ஏத்துவதே.

இத்தகை யார்வாழ்ந்த இந்திய தேயத்தில்
இன்று வாழ்ந்துவரும் நம்மவர்கள்
உத்தமர்சென்ற வழியிற் சென்ருல் என்றும்
உண்டு சுதந்தரம் உண்மையதே. 52

கடவுள் வாழ்த்து

திருக்குறள் முதல் அதிகாரத்தைத் தழுவியது.

(" முத்திநெறி அறியாத " என்னும் மெட்டு)

உலகத்தின் முதல்வன் நீ
ஓரெழுத்தே அகரம்போல்
பலகலைகள் பயின்றாலும்
பய னுண்டோ நினைமறந்தால்
மலர்விரும்பும் பெருமானே
மாட்சிமையே நினையணையின்
விலகுமன்றோ எத்துயரும்
வேண்டுதல்வேண் டாமையிலாய்!

நினக்குரிய மெய்ப்புகழை
நினைவார்க்கே வினையில்லை
எனக்கருதி ஒருணர்வாய்
இருப்பாரே இனிதிருப்பார்
தனக்குவமை இல்லாத
தனியறமே தண்ணளியே
இனிக்கவலைப் பிறப்புண்டோ
இறையே நின் தாள்வாழி!

யானே தவஞ்செய்தேன்; ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன்; எம்பெருமான்!—யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன்; நல்லேன் பெரிது. 54

—பூதத்தாழ்வார்

வழங்குகின் றாய்க்குன் அருளா ரமுதத்தை
வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென்
விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்து
உய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேனுடை யாயடி யேன் உன்
அடைக்கலமே. 55

—மாணிக்கவாசகர்

அறிவிலேன் அறிந்தார்க் கடிப்பணி புரியேன்
அச்சமும் அவலமும் உடையேன்
செறிவிலேன் பொதுவாந் தெய்வ நீ நினது
திருவுளத் தெனைநினை யாயேல்
எறிவிலேன் சிறியேன் எங்ஙனம் புகுவேன்
என்செய்வேன் யார்துணை என்பேன்
பிறிவிலேன் பிரித்தா லுயிர்தரிக் கலனென்
பிழைபொறுத் தருள்வதுன் கடனே. 56

—இராமலிங்கர்

The Jupiter Press, G. T., Madras.

Publication No. 292

KAZHAGAM

POEMS FOR THE YOUNG

★

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
- WORKS PUBLISHING SOCIETY -
TINNEVELLY, LTD.,
6, CORAL MERCHANT ST., MADRAS

PRICE AS. 6